## லங்காபுர பிரதேச சபை
## பொலன்னறுவ மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 28 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து லங்காபுர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் என்பன அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சபையின் கணக்கீட்டுக் கொள்கையை வெளிப்படுத்தும் போது முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பன காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது. | அட்டுரு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். 2020 ஆண்டில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

#### (ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டிற்கான இனங்கண்டிருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 5,401,974 தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,425,833 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்களை பெற்று கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். தகவல் பெறுவதில் தாமதம் காரணமாக சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய முடியாமல் இருக்கின்றது என அறிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் திசெம்பர் மாதத்திற்கான பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்களை பெற்று கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். உரிய தகவல்கள் கிடைக்கப் பெறாமையால் கணக்கீடு செய்யப்படவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டிற்கான ரூபா 344,843 தொகைக்கான செலவுகளை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகை மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கு மீதியிடையே ரூபா 10,724,385 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் சரி செய்வேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| நி.பி. 396 | 340,995 | வழங்கியிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ஆறு மாதங்களை கடந்துள்ள 23 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நி.பி. 396 பிரகாரம் நடவடிக்கை எடுத்துள்ளேன். |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெறவேண்டிய ரூபா 2,725,586 தொகையில் ரூபா 1,914,730 தொகை ஐந்து வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளாகும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், தவணைகளாக செலுத்துவதற்கு இணங்கியுள்ளனர். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் செயற்படுத்தியிருந்த பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 28,152,037 தொகை பெறவேண்டியிருந்ததுடன், ரூபா 29,931,394 தொகை செலுத்தவேண்டியிருந்தது. | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. |

# 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 1,594,162 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,134,193 தொகையாக காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 70,000 | 30,000 | 30,000 | | 70,000 | 81,750 | 81,750 | |
| வாடகை | 9,296,114 | 8,935,208 | 9,049,549 | 2,017,329 | 6,955,286 | 9,771,470 | 9,602,530 | 2,232,265 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,040,750 | 1,530,804 | 1,530,804 | | 1,307,000 | 1,959,890 | 1,959,890 | |
| ஏனைய வருமானங்கள் | 7,680,913 | 11,137,354 | 12,017,342 | 1,613,287 | 9,984,470 | 9,157,474 | 5,828,664 | 4,514,522 |
| மொத்தம் | 18,087,777 | 21,633,366 | 22,627,695 | 3,630,616 | 18,316,756 | 20,970,584 | 17,472,834 | 6,746,787 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2012 ஒக்தோபர் 31 திகதி தல்பொத நகரம் முன்னேற்றப்பட்ட பிரதேசம் ஒன்றாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 2013 நவம்பர் 28 திகதி வீதவரி அறவீடு செய்வதற்காக பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் 29 ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. எனினும், பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக சபைக்கு இயலாமல் உள்ளதால் 07 வருடங்களுக்கு மிகையான காலம் சபைக்கு சேகரிக்கக்கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது. | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதென இனங்கண்டிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,078,823 தொகையாகும். | பெறவேண்டிய வருமானம் நாளதுவரையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் காலத்திற்கு உகந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்ளப்படுகின்றன என அறிவிக்கின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னைய ஆண்டுகளுக்கான அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 351,528 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்குரிய வருமானம் ஏதும் இனங்கண்டிருக்கவில்லை. | தகவல்கள் நாளதுவரை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பொறுப்புச் சொல்லவேண்டிய நிறுவனங்களினால் தகவல்கள் அனுப்பியிருக்கவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| லங்காபுர பிரதேச சபையின் அதிகார பிரதேசத்தில் வகைப்படுத்தப்படாமல் குப்பை சேகரிக்கப்பட்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது. | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப் பட வேண்டும். | குப்பைகளை வகைப்படுத்தி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் பதில் கடமை ஆற்றுவதற்காக பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டாம் மட்டத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 05 பேர் மற்றும் நூலகர் பதவிகள் 03 பேர் வெற்றிடமாக காணப்பட்டதுடன் ஏனைய பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | இணங்குகின்றேன். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் படி உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 30,225,118 தொகைக்கான 10 கட்டடங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நீண்ட காலம் முதல் விளைவற்று காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்த வேண்டும். | கிராம சபை கட்டடத்தை உடைத்து அகற்றுவதற்கும் 2018 கணிப்பீட்டின் படி ஏல விற்பனவு செய்து மீதியாக உள்ள ஏனைய பண்டங்களை மீண்டும் ஏல விற்பனை செய்வதற்கும் பஸ் தரிப்பிடம், சுபோடா கை டிரக்டரும் டேலரும் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வு அலுவல்களுக்காக மீளாய்வாண்டின் போது உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு அரை ஆண்டு உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பெண் உத்தியோகத்தருக்கு ஏனைய கடமைகள் சாட்டப்பட்டதனால் மற்றும் முறையான பயிற்சி ஒன்று இன்மையால் உரிய முறையில் உள்ளகக் கணக்காய்வு நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்விற்காக பொருத்தமான உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். | பதவியணி வெற்றிடம் காரணமாக ஏனைய கடமைகள் மேற்கொள்ளும் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், விடயம் தொடர்பாக பயிற்சியொன்று வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென உள்ளூராட்சி திணைக்களம் அறிவித்துள்ளது. |